ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | அக்டோபர் 1999 | கானம் : 3

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 5 அக்டோபர் 1999 கானம் : 3


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 47 | 5 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 29 | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 17 | 12 |
| 6. | ஸ்ரீ போதேந்த்ராள் க்ரந்தங்களிலிருந்து | 19 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 23 | 27 |
| 8. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 26 | 28 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 50 | 29 |
| 10. | செய்திகள் | 31 |
| 11. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 31 |



கோவிந்த பட்டாபிஷேக தினத்தன்று மதுரகிரி மலையில் - ஸ்ரீ ஸ்வாமிகள்

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ரூபகம்

பல்லவி

பரிபூர்ண பரிபூர்ண பரிபூர்ண பாலய மாம்
பரிபூர்ண பரிபூர்ண பரிபூர்ண பாலய மாம் (பரிபூர்ண)

சரணங்கள்

கிரிராஜராஜ பாலய மாம்
கரிராஜவரத பாலய மாம் (பரிபூர்ண)

வைரி நாஶக பாலய மாம்
ப்ரியஜனபாலன பாலய மாம் (பரிபூர்ண)

ஹரிமுகஸுந்தர பாலய மாம்
த்ரிபங்கிரூப பாலய மாம் (பரிபூர்ண)

தாரித்ர்யவிநாஶக பாலய மாம்
துரித நிவாரக பாலய மாம் (பரிபூர்ண)

ஸ்ரீமுரளீதர பாலய மாம்
அர்ச்சித ஹரிசரணம் மாம் பாலய (பரிபூர்ண)

1. Internet edition of "Madhura Murali" is available at website www. madhuramurali.org
2. To know more about mision activities visit our website



## மதுரமான ஞனீயர் 47

நம்முடைய பெருமாளுடன் பத்ரிகாஶ்ரமம் வரை யாத்திரை செய்துவந்த போதிலும், இதுவரை பூஜையுடன் திருப்பதி செல்லாதது நம் ஸ்வாமிகளுக்கு ஒரு குறையாகவே இருந்து வந்தது. திருப்பதியில் அகண்டமாக (ஸப்தாஹ) நாமஸங்கீர்த்தனம் செய்யவேண்டும் என்று நம் ஸ்வாமிகளுக்கு வெகு நாளாக ஆசை. ஆனால் அதற்கு போதிய அவகாசம் இல்லாததால், சென்ற மாதத்தில் பூஜையுடன் திருப்பதி சென்று மூன்று நாட்கள் தங்கி வந்தார். நம்முடைய ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கும், திருப்பதி பெருமாளுக்கும் தானாகவே அமைந்த ஒரு ஒற்றுமை என்னவென்றால் இரண்டு பெருமாளின் அவதார தினமும் புரட்டாசி ஶ்ரவண நக்ஷத்ரத்துடன் கூடிய விஜயதசமி ஆகும். திருப்பதியில் தங்கியிருந்த மூன்று நாட்களும் விசேஷமாக நம்முடைய ப்ரேமிகவரதனுக்கு அர்ச்சனைகள் நடைபெற்றது. ஒருநாள் இரவு திவ்யநாம ஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. பல பக்தர்களும் வந்து கலந்து கொண்டார்கள்.

ஒரு நாள் விடியற்காலையில் சுமார் 3மணி அளவில், நம்முடைய ஸ்வாமிகள் ''ஜெய் ஜெய் கோவிந்த ஜெய ஹரி கோவிந்த'' என்று நகர ஸங்கீர்த்தனம் செய்து வந்தார். மாலையில் வீதி ப்ரதக்ஷிணம் பக்தர்களுடன் செய்தார். மேலும் மலைமேல் உள்ள பாபநாச தீர்த்தம், ஆகாச கங்கா, ஹாத்திராம் பாபா ஜீவ சமாதி போன்ற எல்லா இடங்களுக்கும் பக்தர்களுடன் சென்று வந்தார். திருப்பதியில் தங்கியிருந்த ஸமயத்தில் க்ரஹண புண்ய காலமும் கூடி வந்ததால், பக்தர்கள் எல்லோரும் க்ரஹண ஸ்நானம் செய்து ஜபங்கள் செய்தனர். க்ரஹண காலமுமாக இருந்ததால் கோவிலிலும் அந்த அளவிற்கு கூட்டம் இல்லாமல் இருந்ததால் பக்தர்கள் சுலபமாக அடிக்கடி சென்று பெருமாளை தரிசனம் செய்தார்கள். (தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிகளின் பதில்கள்

கேள்வி : என்னுடைய நண்பர் ஒருவர் வெகுகாலம் ப்ரஹ்மசாரியாக வாழ்ந்து ஸாதனைகள் செய்து வந்தவர், இப்பொழுது திடும் என்று திருமணம் செய்து கொண்டு விட்டார். ஏன் இப்படி ஆகி விட்டது?

ஸ்ரீ ஸ்வாமிகள் : இதில் ஆச்சரியப்பட என்ன உள்ளது?

கேள்வி : என்ன அப்படி சொல்லி விட்டீர்கள்?

பதில் : உலக வாழ்க்கையில் ஒருவர் மயங்கி வீழ்வது என்பது அதிசயமில்லை. அதை ஜெயிப்பது என்பதுதான் அதிசயம்.

கேள்வி : சிகை, கச்சம், வெளி விஷயங்களான ஆசாரம் போன்றவைகளை காட்டிலும் ஸத்யம், அஹிம்ஸை, ப்ரஹ்மச்சரியம் போன்றவைகள்தானே முக்கியம்?

பதில் : ஸந்தேகம் என்ன?

கேள்வி : ஆனால் தாங்கள் வெளி ஆசாரங்களை அனுஷ்டிப்பவர்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக தோன்றுகிறது. அவர்களிடம் மேற்படி குணங்கள் எல்லாம் இருப்பதாக தெரியவில்லை. அப்படியிருக்கையில் அவர்களை ஏன் மதிக்க வேண்டும்?

பதில் : அவர்களிடம் வெளிப்படையான ஆசார சின்னங்களாவது இருக்கின்றது. மற்றவர்களிடம் இரண்டுமே இல்லை. ஆகவே அவர்களுக்கு முக்கியத்துவம் தருவதில் தவறில்லை.

கேள்வி : என்னுடைய கணவர், குடும்பம், உத்யோகம் போன்றவைகளை கவனிக்காமல் அடிக்கடி ஸாது ஸங்கம், தீர்த்த யாத்திரை சென்று விடுகின்றார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

பதில் : மஹான்களின் தரிசனத்தினாலும், புண்ய யாத்திரை செய்வதினாலும் நன்மையே ஏற்படும். அதற்காக கவலைப்பட தேவையில்லை.

கேள்வி : அநேக மஹான்களுடைய சரித்திரங்களை படித்துள்ள நான் அத்தகைய ஒரு மஹானை இப்போது எங்கு தேடியும் கிடைக்கவில்லையே! ஏன்?

பதில் : மஹான்களுடைய சரித்திரங்களை படிப்பது என்பது வேறு. மஹான்களுடன் ஸமகாலத்தில் வாழ்வது என்பது வேறு. சரித்ரங்களை எழுதும்பொழுது படிப்பவர்களை உயர்த்தும் எண்ணத்துடன் தேவையில்லாத பல விஷயங்கள் தவிர்க்கப்பட்டு, தேவையான விஷயங்கள் மட்டுமே எழுதப்படுகின்றது.

கேள்வி : அத்வைத நிலையை அடைந்தவர்கள் எந்த கார்யமும் செய்யாமல் மௌனமாக அமர்ந்திருப்பார்கள். அப்படித்தானே?

பதில் : அத்வைத ஸ்தாபகரான ஶங்கரரே தன்னுடைய 32 வயதிற்குள் பாரதம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து, அநேக க்ரந்தங்களை வர்ஷித்து, அநேக பீடங்களை ஸ்தாபித்து, துர்மதங்களை கண்டித்து ஓயாமல் கார்யம் செய்து வந்தார். ஶங்கரருடைய ஸித்தாந்தமே, உலகம் மித்யை என்பதுதானே. அந்த பொய்யான உலகத்தில் இவ்வளவு கார்யங்கள் செய்ய வேண்டிய அவசியம் என்ன? ஆகவே அத்வைத நிலையை அடைந்தவர்கள் மௌனமாக ஏதோ ஒரு இடத்தில் அமர்ந்திருப்பார்கள் என்று அர்த்தம் இல்லை. அக்ஞானிகள் தங்களுடைய சொந்த நலனை உத்தேசித்து காரியங்கள் செய்து வருவார்கள். ஞானிகள் லோக நலனை உத்தேசித்து காரியம் செய்வார்கள். இதுதான் மஹான்களுக்கும் அக்ஞானிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

கேள்வி : மஹாபுருஷர் என்று சிலரை சொல்கின்றோம். அவதார புருஷர்கள் என்று சிலரை சொல்கின்றோம். இரண்டிற்கும் வித்தியாசம் என்ன?

பதில் : ஒருவர் கடுமையான ஸாதனைகளை செய்து தன் வரையில் உன்னத நிலையை அடைந்தவர். அவரும் பெரிய மஹான்தான். ஆனால் அவரால் லோகத்தில் ஸத்ஸம்ப்ரதாயமோ, ஞான உபதேசமோ, பக்தி உபதேசமோ பரவாது. இத்தகையவரே மஹாபுருஷர். அவதாரபுருஷர் என்பவர், தான் மட்டும் கரையேறினது மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான மக்களை கரையேற்ற வந்தவர். அவதார புருஷர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஸம்ப்ரதாயம் பல்லாயிரம் வருடங்கள் வரை இருக்கும். அவதார புருஷர் என்பவர் பகவானால் அனுப்பி வைக்கப்பட்டவர்.

கேள்வி : கலியுகத்தில் எல்லோருக்கும் நாம ஸங்கீர்த்தனம் ஒன்றுதான் கதியா?

பதில் : இரவில் எப்படி எல்லோருக்குமே கண் தெரியாதோ, அதுபோல் கலியுகத்தில் ஒருவருடைய சித்தம் கூட சுத்தமாக இருக்காது. ஆகையால் எல்லோருக்கும் மஹாப்ரபு காண்பித்த நாமஸங்கீர்த்தனம் ஒன்றே கதி.

---


श्री हरिः

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

சென்னை - 600 083.

மதுரமுரளி வருடசந்தா - **Reminder - II**

வருட சந்தா - உள்நாடு **Rs.** 60/- வெளிநாடு **Rs.** 300/-

""குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
Phone : 4714327

# வேத கதைகள் - 29

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## வைஸ்வாநர வித்யை

உபமன்யுவின் பிள்ளை ப்ராசீனசாலர், புருஷுருடைய பிள்ளை ஸத்ய யஜ்ஞர், பல்லவியினுடைய பிள்ளை இந்த்ரத்யும்னர், சர்க்கராக்ஷுருடைய பிள்ளை ஜனர், அஸ்வதரருடைய பிள்ளை புடிலர் இந்த ஐவரும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள். பெரிய வீடுகளில் வசிப்பவர்கள். நல்ல படிப்பு, அத்யயனம், ஒழுக்கம் நிரம்பியவர்கள். இந்த ஐவரும் ஒரு ஸமயம் ஒன்று கூடி ஆத்மா, ப்ரஹ்மம் என்றால் என்ன? என்று விசாரம் செய்தனர். விசாரம் செய்தும் அவர்களுக்கு விடை கிடைக்கவில்லை. பிறகு, அருணர் என்பவரின் பிள்ளையான உத்தாலகர் தத்வங்களை நன்கு அறிந்தவர் என்று தெரிந்துகொண்டு அவரை குருவாக நாடி அவரிடம் சென்றனர்.

இவர்கள் வருகையை உணர்ந்த உத்தாலகர், இவர்களுக்கு நான் உபதேசம் செய்யப் போவதில்லை என்று தீர்மானித்து, ''ஓ, பெரியோர்களே! தற்சமயம் கேகய தேசத்து அரசனான அஶ்வபதி என்பவன் தத்வங்களை நன்கு அறிந்தவன். அவரிடம் செல்லுங்கள் என்று கூறினார். அவர்களும் உத்தாலகர் சொல்லை கேட்டு அஶ்வபதி என்ற அரசனிடம் சென்றனர். அஶ்வபதியும் அவர்களுக்கு தனித்தனியாக மரியாதை செய்தான். அவர்கள் வந்த காரணத்தை அறியாமல் அரசன் அவர்களை இரவில் அரண்மனையில் தங்கும்படி வேண்டினான். அரசன் கூறியபடி அவர்களும் அரண்மனையில் தங்கினார்கள்.

பண்டைய காலங்களில் ப்ராஹ்மணர்கள் காலையில் எட்டு மணி முதல் பத்தரை மணி வரை அரண்மனைக்குச் சென்று அரசனை வாழ்த்தி அரசன் கொடுக்கும் செல்வங்களை பெற்று அதனால் வாழ்க்கை நடத்தி வந்தனர். இதை கௌதமர் தர்ம ஸூத்ரங்களில் (யோக க்ஷேமார்த்தம் ஈஶ்வரம் அதிகச்சேத்) யோக க்ஷேமத்திற்காக ஈஶ்வரனை அடையவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இங்கு ஈஶ்வரன் என்ற சொல்லால் அரசன் கூறப்படுகிறான். ஆதலால் அஶ்வபதி என்ற அரசன் இந்த ஐந்து முனிவர்களும், செல்வத்தை நாடி தன்னிடம் வந்திருக்கின்றனர் என்று எண்ணி, மறுநாள் காலையில் அரசன் முனிவர்கள் இருக்குமிடம் சென்று, என்னால் அளிக்கப்படும் இந்த

செல்வத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வணக்கத்துடன் வேண்டினான். அவர்கள் செல்வத்தை நாடி வராததால், தாங்கள் வந்த காரணத்தை அரசனிடம் சொல்லாமல், அவன் அளிக்கும் செல்வத்தை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்தனர்.

தர்ம ஶாஸ்த்ரங்களில், சுத்தமான மனிதனிடமிருந்து தான் செல்வத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் (நிஶுத்தாஶ்ச ப்ரதிக்ரஹ:) என்று கூறியுள்ளது. அரசன் அளித்த செல்வத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால், ''நான் குற்றமுள்ளவன், அதனால்தான் என்னுடைய செல்வத்தை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள்'' என்று எண்ணி தன்னிடம் எந்தவித குற்றமும் இல்லை என்று பின்வருமாறு விளக்கினான். ''ஓ, பெரியோர்களே! என் தேசத்தில் பிறர் பொருளை திருடுபவன் இல்லை. செல்வம் இருந்து கொடுக்காதவன் இல்லை. மத்யபானம் செய்யும் ப்ராஹ்மணனும் இல்லை. நூறு பசுக்கள் இருந்து அக்னிஹோத்ரம் செய்யாதவனும் இல்லை. கல்வி அற்றவனும் இல்லை. பிறர் பெண்களை அடைய ஆசைப்படும் காமுகன் இல்லை. கெட்ட ஆண்களே இல்லாததால் கெட்ட பெண்கள் என் ராஜ்யத்தில் எவ்விதம் இருக்க முடியும்! ஆதலால் என் பொருளை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வேண்டினான். இவ்விதம் கூறியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபொழுது, தான் அளிக்கும் செல்வம் அவர்களுக்கு குறைவானது என்று எண்ணி, ஓ, பெரியோர்களே! சில தினங்களில் நான் ஒரு யாகம் செய்யப் போகிறேன். ஆதலால் தற்சமயம் அதிகமாக கொடுக்க முடியவில்லை. தற்சமயம் இதை ஏற்றுக்கொண்டு யாகத்திற்கும் வாருங்கள். அப்பொழுது யாகத்தில் ஒவ்வொரு ரித்விக்குகளுக்கும் எத்தனை தக்ஷிணை அளிக்கிறேனோ அத்தனையும் சேர்த்து உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அளிக்கிறேன் என்று கூறினான்.

அப்பொழுது தான் இந்த ஐவரும், ''நாங்கள் செல்வத்தை நாடி வரவில்லை. விராட் என்று கூறப்படுகிற பரம்பொருளின் தத்வத்தை உன்னிடம் உபதேசம் பெறுவதற்காக நாங்கள் வந்திருக்கிறோம். ஆதலால் அதையே எங்களுக்கு விளக்குவாயாக'' என்று வேண்டினார்கள். அரசனும் நாளை காலை உபதேசிக்கிறேன் என்று கூறி அவர்களை அனுப்பினான். அவர்களும் அரசனின் அபிப்ராயம் அறிந்து ஸமித்துக்களை கையில் ஏந்தியவர்களாக மறுநாள் அரசனை நாடிச் சென்றனர். இங்கு ப்ராஹ்மணர்கள் க்ஷத்ரியனை உபதேசம் பெற அண்டி உள்ளார்கள். இதனால் உயர்ந்த கல்வி எவரிடம் இருந்தாலும், தான் உயர்ந்தவன் என்ற அஹங்காரத்தை விட்டு கல்வி கற்கவேண்டும் என்று புலப்படுகிறது. அரசனும் இந்த முனிவர்கள் உயர்ந்தவர்கள் என்று கருதி

சீடனுக்குரிய நியமங்களை அவர்களுக்கு அளிக்காமல், அவர்களுக்கு விராட் ஸ்வரூபத்தை உபதேசம் செய்தான். ஐந்து குருடர்கள் யானையை பார்க்க சென்றார்கள். அவர்களில் ஒருவன் துதிக்கையை பிடித்து இதுதான் யானை என்று எண்ணினான். மற்ற நால்வரும் காது, வயிறு, கால்கள், வால் இவைகளையே யானை என்று எண்ணினார்கள்.

அதை போல விராட் உருவமுள்ள பகவானுக்கு, பூமி கால், த்யுலோகம் தலை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் குருடர்கள் போல, பூமியை பகவானுக்கு பாதம் என்று அறியாமல், பூமியையே பகவான் என்று எண்ணி கொண்டிருந்தார் ஒருவர். மற்றொருவர் த்விலோகத்தை பகவானின் தலை என்று அறிந்து கொள்ளாமல் த்விலோகத்தையே பகவான் என்று அறிந்தார். இப்படி ஒருவரும் பகவானை முழுமையாக அறியவில்லை. அரசன் அவர்களுடைய அறியாமையை விலக்கி அவர்களுக்கு விராட் என்ற பரம்பொருளின் உண்மையை நன்கு விளக்கினான். அவர்களும் மகிழ்ந்தவர்களாக தங்கள் இருப்பிடம் சென்றனர். சுத்தமானவனிடத்தில் தான் செல்வம் பெறவேண்டும் என்றும், செல்வத்தில் நாட்டமில்லாமல் கல்வியிலேயே நாட்டமிருக்க வேண்டும் என்றும் பல உண்மைகள் நமக்கு இதிலிருந்து நன்கு விளங்குகின்றன.

---

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், ''ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்'' என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. மதுரமுரளி நான்காண்டு இதழ்கள் தனிபாகங்களாக வெளிவந்துள்ளன.

   ii) July '95 - Aug '96 ii) Sept '96 - July '97

   iii) Aug '97 - July '98 iv) Aug '98 - July '99

   இவை சென்னை ப்ரேமிகபவனத்தில் கிடைக்கும்.

# எந்தரோ மஹானுபாவுலு- 17

மஹான்களுக்கும் விரோதிகள் ஏன் ஏற்படுகிறார்கள்? அவர்களிடம்கூட குறை உண்டா என்ன?

மஹான்களிடம் அபரிமிதமாக உள்ள நிறைவான குணம்தான், மற்றவர்களுக்கு அவர்கள் மீது பொறாமை ஏற்படக் காரணமாக உள்ளது. அவர்களுடைய குறைவற்ற ஞானமும், மேதா விலாசமும் அறிவற்றவர்களின் பொறாமையைத் தூண்டி விரோதிகளை சிருஷ்டிக்கிறது. மேலும் மஹான்களுடைய தூய நெறி தவறாத வாழ்க்கை, கெட்டவர்களுக்கு இடைஞ்சலாக இருப்பதால் அவர்களின் விரோதத்தை ஏற்படுத்துகிறது. அப்படி ராமானுஜருக்கு ஏற்பட்ட விரோதம்தான் ஸ்ரீரங்கம் கோவில் ஸ்தானத்தர்களின் விரோதம். ஆனால் உடையவரோ தனக்கு நஞ்சளித்தவரையும் மன்னித்து, தன்னுடைய அன்பு வலைக்குள் சிக்க வைத்துக்கொண்டார்.

இந்த ஸமயத்தில், ராமானுஜர், கத்யத்ரய க்ரந்தங்களாகிய ஶரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், வைகுண்டகத்யம் ஆகிய மூன்று நூல்களை இயற்றினார். அத்துடன் நித்யக்ரந்தம் என்ற வழிமுறை நூலையும் இயற்றினார். இந்த நூல்களின் சிறப்பு ஸ்ரீராமானுஜரின் மேதாவிலாசத்தை பரப்பி அவரது புகழ் வடக்கேயும் சென்று காசி மஹாவித்வானான யஜ்ஞமூர்த்தி என்பவர் காதிலும் விழுந்தது. தென்னிந்தியாவில் தோன்றிய யஜ்ஞமூர்த்தி என்ற மஹாவித்வான், வட இந்தியா முழுவதும் பல பெரும் புலவர்களைத் தோல்வியுறச் செய்து ஸர்வவிஜயீ என்ற பட்டம் பெற்றவர். ராமானுஜர், மாயாவாதத்தை மறுத்து தமது புதிய ஸித்தாந்தத்தை பரப்பிக் கொண்டிருந்தது பற்றி கேள்வியுற்று, அவர் ஸ்ரீரங்கத்துக்கு விரைந்து வந்து யதிராஜரை தம்முடன் வாதம் செய்ய அறைகூவி அழைத்தார்.

ராமானுஜரும் தர்க்கிற்கு உடன்பட்டு, ‘‘நீர் தோற்றால் என்ன செய்வீர்?’’ என வினவினார். யஜ்ஞமூர்த்தி ‘‘நான் தோற்றால் உமது பாதுகையை தலையில் சுமந்து உமது ஸித்தாந்தத்தை ஏற்று நடப்பேன்’’ என்று கூறி, ‘‘நீர் தோற்றால் என்ன செய்வீர்?’’ என்று கேட்டார். ராமானுஜருக்கு அவரது மதத்தில் திட விஶ்வாசம் இருந்தது. தான் தோற்றால் அது தனது பலவீனத்தை மாத்திரம் குறிக்குமே தவிர,

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கு ஒரு இழிவும் வராது என உணர்ந்து, ''யஜ்ஞமூர்த்தி, நான் தோற்றால் இனி எந்த க்ரந்தமும் எழுதுவதில்லை என்று உறுதி ஏற்றுக்கொள்கிறேன்'' என்றார்.

இப்படி இருவரும் ப்ரதிக்ஞை செய்து கொண்டு வாதம் துவங்கி பதினாறு நாட்கள் தொடர்ந்து நடக்க, நாளுக்குநாள் யஜ்ஞமூர்த்தி தர்க்கத்தில் வெற்றி பெற, பதினேழாவது நாள் யஜ்ஞமூர்த்தி பலம் மிகுதியாக, ''நாளை தர்க்கத்தை தொடர்வோம்'' என்று கூறிச் சென்றார். உடையவர் மனம் தளர்ந்து மடத்துக்கு திரும்பினார். தமது ஆராதனா விக்ரகமான வரதராஜனிடம், கனத்த மனத்துடன், ''பேரருளாளனே! இதென்ன சோதனை? ஆழ்வார்களும், ஆளவந்தாரும் போஷித்து போற்றிய ஸ்ரீ வைஷ்ணவ தத்துவம் என் காலத்தில் தோற்கவேண்டுமா? தேவரீரது ஸ்வரூப, குண விபூதிகள் ஸத்தியமென்று நடத்திச் சென்ற தாங்களே, ஒரு மாயாவாதியால் எல்லா ப்ரமாணங்களையும் என்னுடைய காலத்தில் அழித்துவிட திருவுள்ளம் கொண்டால், நான் என்ன செய்ய? தேவரீரது திருவுள்ளப்படி எது நடந்தாலும் சரி'' என்று கூறி வேதனையுடன் சாப்பிடாமலே படுத்து உறங்கினார்.

அன்று வரதராஜப்பெருமாள் ராமானுஜர் கனவில் தோன்றி ''ஏன் வருந்துகிறீர்? தர்க்கத்தில் ஸமர்த்தனான ஒரு சிஷ்யனை உமக்குத் தந்தோம். ஸ்ரீ ஆளவந்தாரின் ஸூக்திகளைச் சொல்லி யஜ்ஞமூர்த்தியை வெற்றி கொள்வீர்'' என்று கூறி மறைந்தார். மறுநாள் காலை வெகு உற்சாகத்துடன் ராமானுஜர் தர்க்கத்துக்கு விரைந்தார். அவரது புதிய பொலிவைக் கண்ட யஜ்ஞமூர்த்தி வியந்து, ''நேற்று தளர்ந்து சென்ற இவர், இன்று மத்த கஜம் போல் கம்பீரமாக வருகிறாரே. இவர் ஸாதாரண மானிடரல்லர். தெய்வீக சக்தி பெற்றவராகத் திகழ்கிறவர்'' என்று நிஶ்சயித்து, உடையவர் திருவடிகளில் தானாகவே வீழ்ந்து, அவரது பாதுகைகளை சிரஸில் தரித்து ''நான் தோற்றேன்! அடியேனை ரக்ஷிக்க வேணும்'' என்று வேண்டினார்.

இந்த திடீர் திருப்பத்தை கண்ட ராமானுஜர், ''நீங்கள் ஏன் தர்க்கிக்கவில்லை'' என்று கேட்க, அந்த மஹாபண்டிதர் பேசலானார். ''பரந்த இதயம் வாய்ந்தவரே! இவ்வளவு நாள் நான் இளக்காரமாக பேசியும், சினமோ, வெறுப்போ கொள்ளாமல் ஶாந்தமாக அமர்ந்துள்ளீர். பெருமாண்புடைய உங்களுடன் இனி ஒரு கணமும் யுக்திவாதம் பேசமாட்டேன். நான் உங்களடிமை'' என்றார். யஜ்ஞமூர்த்தியின் மாறுதலைக்கண்ட ராமானுஜர் வியப்படையவில்லை. முதல்நாள் அவரது

இஷ்ட தெய்வம் கனவில் கூறியது அவர் நினைவில் இருந்தது. பேரருளாளனின் கருணையால்தான் இந்த ஆணவமுள்ள பண்டிதனும் பணிவடைந்துள்ளான் என்று உணர்ந்தார். மென்மையான இனிய குரலில் உடையவர் பேசினார், ''வாழ்க பேரருளாளன் புகழ். அவனது அருள் கடும்பாறையையும் கரைத்துவிட்டது. புலமையால் ஏற்படும் ஆணவத்தை விடுவது என்பது மனிதசக்திக்கு அப்பாற்பட்டது. முடியாத ஒன்றை செய்யும் இந்த அற்புதம் இறைவனது அருளினால்தான் நிகழும். நீர் ஆணவத்திலிருந்து விடுபட்டதும், அவனது அருட்சக்தியால்தான். ஆகவே நீர் பெரும் பாக்கியசாலி,'' என்று கூறி யஜ்ஞமூர்த்தியை தனது சீடனாக உவந்து ஏற்றார். அவருக்கு ஶாஸ்த்ரப்படி பூணூல் அணிவித்து ஊர்த்வ புண்ட்ரமும் அணியப் பணித்து, அருளாளப்பெருமாள் எம்பெருமானார் என்ற திருநாமம் சூட்டி மக்களின் நன்மைக்காக பல நல்நூல்களை இயற்றும்படியும் பணித்தார்.

ஆசாரியனது கட்டளைப்படி அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ஜ்ஞானசாரம், ப்ரமேயஸாரம் என்ற அரிய தமிழ் நூல்களை இயற்றினார். ராமானுஜரும் அவர் தங்குவதற்கென தனி மடம் கட்டிக் கொடுத்தார். மேலும் அவருக்கு ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப்ரபந்தங்களையும் உபதேசித்து அவற்றின் தத்வார்த்தங்களை எடுத்துரைத்தார். ஏற்கனவே வடமொழியில் விற்பன்னரான அருளாளப்பெருமாள் எம்பெருமானார் த்ராவிட வேதத்திலும் சிறந்து ஶ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் தூணாக விளங்கினார்.

அருளாளப்பெருமாளுக்கு மேலும் பெருமை சேர்க்கும் விதத்தில் தன்னை ஆஶ்ரயிக்க வந்த அனந்தாழ்வான், எச்சான், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி ஆகியோர்களையும் அருளாளப் பெருமாளை ஆஶ்ரயித்து இருக்கும்படி ராமானுஜர் கட்டளை இட்டார். அருளாளப்பெருமாள் எம்பெருமானார், ''குருவியின் கழுத்தில் பனங்காயைக் கட்டினாற்போல் உடையவர் செய்திருக்கிறார். நீங்கள் இங்கிருந்தாலும் எம்பெருமானாரையே தஞ்சமென்றிருங்கள்'' என்று கூறினார்.

ஒரு ஸமயம் உடையவர், திருவாய்மொழிக்கு அர்த்தம் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, ''ஒழிவில் காலமெல்லாம்'' என்னும் பதிகத்தில் ''சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து'' என்ற பகுதி வந்தபொழுது, கோஷ்டியிலிருந்தவர்களை நோக்கி திருமலையில்

வேங்கடமுடையானுக்கு உகப்பாக நந்தவனம் அமைத்து மாலைகட்டி சாத்துவார் யாராவது இருக்கிறீர்களா? என்று கேட்டார். உடனே அனந்தாழ்வான் என்பவர் எழுந்திருந்து, ''இந்த கைங்கர்யத்தை தேவரீர் அடியேனுக்கு அருள வேணும்'' என ப்ரார்த்தித்தார். திருமலை செல்ல அனந்தாழ்வானுக்கு உடையவர் அனுமதி அளித்தார்.

அனந்தாழ்வானும் திருமலை சேர்ந்து வேங்கடநாதனுக்கு திருநந்தவனம் அமைத்து அதை ''ராமானுஜன்'' என்று உடையவரது திருநாமத்தால் அழைத்தார். நந்தவனப் பெருமையும், அனந்தாழ்வானின் மாலா கைங்கர்யமும் பற்றி கேள்வியுற்ற உடையவருக்கு திருமலைநாதனை ஸேவிக்க வேணும் என்ற அவா உண்டாயிற்று. எனவே ஸ்ரீரங்கநாதனிடம் இதுபற்றி ப்ரார்த்திக்க, அரங்கனும் உத்தரவு கொடுக்க, திருவேங்கடம் நோக்கி கோஷ்டியுடன் உடையவர் புறப்பட்டார்.

இந்த வைஷ்ணவ கோஷ்டிக்கு ஹரிநாம ஸங்கீர்த்தனமே கட்டுச் சோறாக அமைந்தது. காஞ்சி நோக்கிப் புறப்பட்ட உடையவர் திருவெள்ளறைப் பெருமானையும், திருக்கோவிலூர் திருவிக்கிரமனையும் சேவித்துக்கொண்டு இடையே எங்கு தங்கலாமென்று யோசித்தார். அருகிலுள்ள அஷ்டஸஹஸ்ரம் (எண்ணாயிரம்) என்ற ஊரில் யஜ்ஞேசன் என்றொரு சீடன் தமக்கு இருப்பது நினைவுவர, தாம் கோஷ்டியுடன் வரும் செய்தி சொல்ல முன்னதாக இரு சீடர்களை அனுப்பினார்.

அந்த இருவரும் தெரிவித்த செய்தியைக் கேட்டு யஜ்ஞேசர் மகிழ்ச்சி பிடிபடாமல் உடனே யதிராஜரின் வரவுக்கு ஏற்றபடி உபசாரம் செய்ய ஏற்பாடுகளை தடபுடலாக செய்ய ஆரம்பித்தார். ஆனால் சேதி கொண்டு வந்தவர்களை கொஞ்சமும் கவனிக்கவோ, உணவளிக்கவோ இல்லை. இருவரும் பட்டினியால் நொந்து வருந்தி, ராமானுஜரிடம் வந்து நடந்த செய்தியை அறிவித்தனர்.

இதைக்கேட்டு உடையவர் மிகவும் வருந்தினார். தனது மற்றொரு சீடரான வரதாசாரியாருக்கு விருந்தினராக செல்ல முடிவு செய்தார். வரதாசாரியார் மிகவும் ஏழை. விதுரரைப் போல தூயவர். பிக்ஷை எடுத்துக் உண்டு பரமனை வழிபட்டு வருபவர். அவருக்கு லக்ஷ்மி என்பவர் மனைவியாக இருந்தாள். ராமானுஜர் தம் சீடர்களுடன் விருந்தினராக வரதாழ்வார் வீட்டுக்குள் நுழைந்தபோது அவர் பிக்ஷைக்கு சென்றிருந்தார். கதவு தட்டப்பட்டதும் அவரது மனைவி, கதவைச் சிறிதளவே திறந்து வந்திருப்பவர்களைக் கண்டதும் மீண்டும் கதவுக்குப்

பின் மறைந்தாள். சரியான ஆடையில்லாததால் வர வெட்கி தனது கையை மட்டும் ஒருமுறை தட்டினாள். இதனது உட்கருத்தைப் புரிந்துகொண்ட ராமானுஜர் உடனே தனது உத்தரீயத்தை எடுத்து உள்ளே வீச அதை உடுத்துக் கொண்டு வெளியே வந்த லக்ஷ்மி, உடையவரையும் கோஷ்டியையும் வணங்கி உள்ளே அழைத்தாள். எல்லோரையும் எதிரில் உள்ள குளத்தில் குளித்து களைப்பை நீக்கிக் கொண்டு அமருமாறு வேண்டினாள். அதற்குள் தான் திருவாராதனத்துக்கு எல்லாம் சித்தம் செய்வேன் என்றாள். உள்ளே சென்ற அவளுக்கு ஒரே திகைப்பு. வீட்டில் ஒரு மணி அரிசிகூட கிடையாது. இத்தனை பெரிய கோஷ்டிக்கு எப்படி அமுது செய்து படைப்பது என வியந்தாள். ஆனாலும் எப்படியும் ஆசாரியருக்கு தொண்டு செய்யும் பேற்றை இழக்கத் தயாராக இல்லை.

அவளது வீட்டிற்கு அருகில் ஒரு பணக்கார வைசியன் இருந்தான். அவனுக்கு, லக்ஷ்மி நாச்சியாரின் பேரழகில் மயக்கமிருந்தது. பலமுறை அவளுக்கு தூதுவிட்டும் அவள் சிறிதும் நெறி தவறவில்லை. இப்பொழுது அவளுக்கு திடீரென ஒரு யோசனை பளிச்சிட்டது. எலும்பும் இரத்தமும் நிரம்பிய இந்த உடம்பைக் கொடுத்து நான் ஏன் ஆசாரியனுக்கு தொண்டாற்றக்கூடாது? பாகவத ததீயாரதனத்துக்கு இந்த சரீரம் பயன்படுமானால் அதைவிட சிறந்த பாக்யம் இதற்கு என்ன உள்ளது? என்று எண்ணினாள். உடனே அவள், அந்த வைசியனது வீட்டுக்கு சென்று தன் இல்லம் வந்திருக்கும் பாகவதர்களுக்கு ததீயாராதனத்திற்கு வேண்டிய பொருளைக் கொடுக்கும்பட்சத்தில் அவனது இச்சைக்குத் தான் உடன்படுவதாக கூறினாள்.

இதைக்கேட்ட வைசியன் உடனே அந்த கோஷ்டி ஒரு மாதம் தங்குவதற்கான பொருள்களை தனது வேலைக்காரன் மூலம் அனுப்பினான். வரதாழ்வான் மனைவியும், பாகவத ததீயாராதனம் முடிந்தவுடன் இரவு வருவதாக கூறி, வீடு சென்று துரிதமாக தளிகையை முடித்து அனைவருக்கும் உணவருந்த அழைப்பு விடுத்தாள்.

இதற்குள் உஞ்சவிருத்தி முடித்து வந்த வரதாழ்வான், ராமானுஜரின் வரவைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். எம்பெருமானார் திருவடிகளில் விழுந்து வணங்கினான். உள்ளே சென்று மனைவி முடித்து வைத்துள்ள தளிகையைக் கண்டு வியந்து, ''ஏது உனக்கு இத்தனை பொருள்கள்?'' என்று வினவினான். மனைவி சத்தியத்தைச் சொன்னாள். அதைக்கேட்ட வரதாழ்வான் அவளை மிகவும் பாராட்டினான்.

உடையவருக்கு கைங்கர்யம் செய்யும் பாக்கியம் உன்னால் தான் எனக்குக் கிடைத்தது என்று அவளைப் புகழ்ந்தான்.

அன்று ததீயாராதனம் வெகு சிறப்பாக நடந்தது. இந்த ஏழை வீட்டில் இத்தகைய விருந்து எப்படி நடந்தது என உடையவர் சிந்தித்தார். அன்று தீர்த்தப்ரசாதம் வழங்கும் போது அவர்களிருவரையும் இதுபற்றிக் கேட்டார். உடனே லக்ஷ்மி உண்மையை மறைக்காமல் கூறினாள். யதிராஜர் அவர்களது த்யாகத்தை அறிந்து மிகவும் வியப்படைந்தார். பிறகு பெருமாளை தியானித்து தீர்த்தப்ரசாதமும், பாகவதஸேஷமான ப்ரசாதத்தையும் வரதாழ்வானிடம் அளித்து அவற்றை அந்த வைசியனிடம் கொடுக்குமாறு கூறி த்யானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

இரவு, கணவன், மனைவி இருவரும் வைசியன் வீட்டுக்குச் சென்றனர். வரதாழ்வான் வைசியனிடம், ''இன்று உம்மால்தான் மிகவும் புண்யமான பாகவத கைங்கர்யம் நன்கு நடந்தது. எம்பெருமானார் உமக்கு ப்ரசாதம் அனுப்பி இருக்கிறார் என்றார். வைசியன் கை நீட்டி ப்ரசாதத்தை வாங்கி உண்டான். உண்ணும்போதே அவனுக்கு உடல் புல்லரிக்க அவன் கண்களில் தனி ஒளி தோன்றியது. எதிரே நின்ற லக்ஷ்மியிடம் அவனுக்கு விபரீதமான எண்ணமே எழவில்லை. மாறாக அவனது கண்களுக்கு கணவன், மனைவி இருவரும் தெய்வீக தம்பதிகளாக காட்சியளித்தனர்.

பெருமாளும் தாயாரும் போல இருந்த அவர்கள் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். தன்னை மன்னிக்குமாறு வேண்டி உடையவரிடம் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டான். எல்லாம் உடையவரது மகிமை என்று புரிந்து கொண்ட வரதாழ்வான், அவனை அழைத்துக் கொண்டு ராமானுஜரிடம் சென்று அறிமுகப்படுத்தினார். வைசியனும் உடையவரது சரணத்தைப் பிடித்துக்கொண்டு தனக்கும் அனுக்ரஹம் செய்யுமாறு ப்ரார்த்தித்தான். அவனையும் தனது கோஷ்டியில் ராமானுஜர் சேர்த்துக்கொண்டார். வரதாழ்வான், எம்பெருமானும், எம்பெருமானாரும் ஒன்றுதான். இருவருமே ''பத்துடை அடியவர்க்கு எளியவர்'' என்று கூறி கண்ணீர் வடித்தான். ராமானுஜரும் தூயஉள்ளம் வாய்ந்த அந்த பக்தரை அணைத்துக் கொண்டார். ''உன்னைப் போன்ற மஹாத்மாவின் ஸ்பரிசம் பெற்று நான் தூயவன் ஆனேன்'' என்றார்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்



# போதேந்த்ராள் க்ரந்தங்களிலிருந்து

1. நான்கு வேதங்களும் அத்யயனம் செய்த ப்ராஹ்மணனேயானாலும் பகவந்நாமகீர்த்தனம் பண்ணாதவனாகில் அவனுடன் மறந்தும் பேசலாகாது. ஏனெனில் அவன் கர்ம சண்டாளன்.

2. எவனொருவன் பாகவதர்களை நிந்திக்கிறானோ அவனே புலையன்.

3. பகவத்பக்தியை விட்டு வேறெந்த அனுஷ்டானத்தை செய்தவனாயிலும் அவன் சண்டாளனாகிறான்.

4. எவனொருவன் பகவந்நாமத்தை உச்சரிக்காமல் சாப்பிடுகிறானோ அவன் நாயின் மல, மூத்ரம், அஸ்தி, மாம்ஸம் இவைகளைச் சாப்பிட்டவனாகிறான்.

5. ஜன்மாந்தரத்திற் செய்த மஹாபாபங்களின் பலனாகவே ஒருவனுக்கு பகவந்நாமத்திலும் பாகவதர்களிடத்திலும் த்வேஷமுண்டாகும்.

6. எவனொருவன் பகவந்நாமத்தை அவமதிக்கிறானோ, அவன் பிணத்திற்கு ஸமமானவன். அக்னிஹோத்ரம் முதலிய எந்த தர்மமும் அவனுக்கு வ்யர்த்தமாகிறது. மோக்ஷத்திற்காகச் செய்யப்படும் ஆத்மவிசாரமும் அவனுக்கு வ்யர்த்தமாகிறது.

7. ப்ரஹ்மாவின் மூன்று கல்ப காலம் அளவிற்கு கணக்கு வழக்கற்ற புண்யங்களை செய்து முடித்தவனுக்கே பகவந்நாமத்தை உச்சரிக்கும் பாக்யம் கிடைக்கும்.

8. பகவந்நாமகீர்த்தனம் வேதங்களில் சொல்லப்பட்ட ஸகல தர்மங்களையும் விடச் சிறந்தது. மோக்ஷம் வரையுள்ள ஸகல பலன்களையும் தரக்கூடியது. நாமகீர்த்தனத்திற்கு அங்கமாக எந்த நியமமுமில்லை. ஆகையால் மிக ஸுலபமானது. அனுஷ்டிக்கக் கூடியது.

9. கலியில் ஸகல தர்மங்களுடைய பலன்களையும் தரக்கூடியதும், ஸகல பாபங்களையும் போக்கக்கூடியதும், நிகரற்ற புண்யமாயுள்ளதும் மிகவும் ஸுலபமானதுமான உபாயம் நாமகீர்த்தனமே. இதைச் செய்பவர்களுக்கு கலிபுருஷனால் துன்பமில்லை.

10. ஒரு பதிவ்ரதை, தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதென்னும் ஒரு தர்மத்தினாலேயே, ஸகல தர்மங்களையும் அனுஷ்டித்த பலனைப் பெற்று விடுவது போல், ஒரு பக்தன் பகவந்நாமத்தை உச்சரித்தல் என்னும் ஒரு தர்மத்தினாலேயே ஸகல தர்மங்களையும் அனுஷ்டித்த பலனைப் பெற்றுவிடுவான்.

11. கலியுகத்தில் தனக்கு ஹரி நாமத்தைத் தவிர வேறு கதியில்லை என்று நாரதரே சபதம் செய்திருக்கிறார். நாரதரைக் காட்டிலும் யாராவது பெரியவன் இருந்தால் அவன் ஹரி நாமத்தை விட்டிருக்கட்டும்.

12. ப்ரஹ்மச்சாரி தனது படிப்பைக் குறைத்துக்கொண்டு அதிக நேரம் நாம ஜபம் செய்யவேண்டும். க்ருஹஸ்தன் தனது லௌகீகவ்யவஹாரத்யையும் கர்மானுஷ்டானங்களையும் குறைத்துக் கொண்டு அதிக நேரம் நாம ஜபம் செய்யவேண்டும். வானப்ரஸ்தன் தனது நியமத்தைக் குறைத்துக் கொண்டு அதிக நேரம் நாமஜபம் செய்ய வேண்டும். யாவரும் கலியில் நாமஜபத்திற்கே முக்கியம் தரவேண்டும்.

13. ஒரு ஸமயம் நாரதர் விஷ்ணுவினிடம் சென்று, ''கலியில் வைஷ்ணவ லக்ஷணம் என்ன?'' என்று கேட்டார். அதற்கு விஷ்ணு ''நாராயண நாம கீர்த்தனமே வைஷ்ணவ லக்ஷணம்'' என்றார். எனவே எவன் நாமகீர்த்தனம் செய்யவில்லையோ அவன் வைஷ்ணவன் இல்லை. வைஷ்ணவ குலத்திற் பிறந்த அளவில் வைஷ்ணவனாகிவிட மாட்டான். நாராயணனை பஜனம் செய்பவனே வைஷ்ணவன்.

14. தாரணையைவிட த்யானம் சிறந்தது. த்யானத்தைவிட ஸமாதி சிறந்தது. ஸமாதியைவிட ஸாக்ஷாத்காரம் சிறந்தது. ஸாக்ஷாத்காரத்தைவிட நாமகீர்த்தனம் சிறந்தது. இத்தகைய நாமகீர்த்தனத்தால் ஸகல பாபங்களும் அழியுமென்றால் அது மிகையாகாது.

15. இன்ன ஜாதியில் பிறந்தவர்கள்தான், இன்ன காலத்தில் நாம கீர்த்தனம் செய்யலாமென்றோ, இன்ன தேசத்தில்தான் நாமகீர்த்தனம் செய்யலாமென்றோ, இந்த ஆசாரத்துடன்தான் நாமகீர்த்தனம் செய்யாலாமென்றோ விதிக்காமல், எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும், ஆசாரமாயிருந்தாலும், அனாசாரமாயிருந்தாலும் எந்த ஜனங்களும் நாமகீர்த்தனம் செய்யலாமென்று வேதம் கூறுகிறது.

16. பகவானின் நாமத்தைச் சொல்ல உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதமோ ஆண், பெண் என்ற பேதமோ இல்லை. யாவருக்கும் அதிகாரம் உண்டு.

17. பகவந்நாமகீர்த்தனம் செய்பவன் பாபம் செய்துவிட்டானானால் அவனுக்கு வேறு ப்ராயச்சித்தமில்லை. பகவந்நாமகீர்த்தனத்

தாலேயேதான் அவன் பாபம் போக வேண்டும்.

18. ஸாதுக்களை நிந்தித்தல், துஷ்டர்களிடம் நாம மஹிமையைக் கூறுதல், ஹரிஹர பேதம், வேதத்தில் அவநம்பிக்கை, மற்ற ஶாஸ்த்ரங்களிலும் அவநம்பிக்கை, குருவின் உபதேசங்களில் அவநம்பிக்கை, நாம மஹிமையில் ஸந்தேஹம், நாமபலத்தால் பாபம் செய்தல், நாம பலத்தால் விஹித கர்மானுஷ்டானங்களை விடுதல், மற்ற தர்மங்களுடன் ஸமமாக நாமகீர்த்தனத்தை ஒப்பிடுதல் இவை நாமாபசாரங்களாகும். பாகவதர்கள் இந்த அபசாரங்களைச் செய்யாமலிருக்கவேண்டும்.

19. நாமாபராத பாபங்களையும் நாமகீர்த்தனமே போக்கும். இடையறாது நாமகீர்த்தனம் செய்வதே நாமாபராதங்களைப் போக்க வழி.

20. நாமாபராதம் உள்ளவர்களுக்கு நாமத்தை ஒருதரம் உச்சரித்தால் மட்டும் போதாது. நாமாபராதம் இல்லாதவர்களுக்கே ஒரு தரம் உச்சரித்த அளவில் பலன் தரும். மற்றவர்களுக்கு நிரந்தரம் ஜபம் செய்வதாலேயே பலன் தரும்.

21. கர்மானுஷ்டானத்தில், மந்த்ரலோபம், த்ரவ்யலோபம், ஆஜ்ய லோபம், க்ரியாலோபம் முதலிய எந்த லோபங்களிருந்தாலும் நாமகீர்த்தனம் செய்தால் எல்லாம் ஸரிவர அனுஷ்டித்ததாகி விடுகிறது.

22. எல்லா விதத்திலும் சிறப்பு வாய்ந்த ப்ராஹ்மணோத்தமர்கள் நாபி மஹாராஜனுக்கு யாகம் செய்வித்தனர். அந்த யாகத்தில் பகவானே ப்ரத்யக்ஷமாகிவிட்டான். அந்த பகவானிடம் ப்ரஹ்மணர்கள் தங்களுக்கு நாமகீர்த்தனம் செய்யும் பாக்யம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இப்படியிருக்க, சில மூடர்கள் மட்டும் ப்ராஹ்மணர்களுக்கு நாமகீர்த்தனம் விதிக்கப்படவில்லையென்று ஏமாற்றுகிறார்கள். தாங்களும் ஏமாறுகிறார்கள்.

23. மண்டலம் பூராவும் ரக்ஷிக்கக் கூடிய ஓர் அரசன் இருந்தான். அவன் நாட்டில் திடீரென பயங்கர வியாதி பரவத் தொடங்கியது. ஜனங்கள் அரசனிடம் தெரிவித்தனர். அரசன் அதற்கு என்ன செய்வான்? அவன் வைத்யனை வரவழைத்து உபசரித்து ஜனங்களுக்கு சிகித்ஸை செய்ய உத்தரவிட்டான். வைத்யரின் உதவியால் ஜனங்கள் குணமடைந்தனர். மண்டலேஶ்வரனாயினும், அரசனால் வைத்யனில்லாவிடில் என்ன செய்ய முடியும்? அதுபோல் ஸம்ஸார ரோகம் தீரவேண்டி யாவரும் ஞானத்தை விரும்புகின்றனர். ஆனால் ஞானம் மோக்ஷ ஸாதனமாயினும்

பக்தியின் உதவியின்றி ஞானத்திற்குப் பலமில்லை. எனவே, ஞானமும் பக்திக்கு அதீனமாகிவிடுகின்றது. பக்தியாலேயே ஞானம் ஸித்திக்கும். எனவே ஞானயோகத்தைவிட நாமகீர்த்தனமே சிறந்தது.

24. ஒருக்காலும் முக்தியடைய முடியாதவர்கள்கூட நாமகீர்த்தனத்தால் முக்தியடையலாமென்பதே கீதாபாஷ்யத்தின் ஸாரம்.

25. கலியில் நாமகீர்த்தனம் செய்வர்களுக்கு பாதகமே இல்லையென்று ஸத்யமாய்க் கூறுவேன். இவ்விஷயத்தில் காய்ச்சின இரும்பைக் கையில் பிடிப்பேன். பாம்புக் குடத்தில் கையை விடுவேன்.

26. ஒரு ப்ரஹ்மசாரி பிக்ஷைக்கு வருகிறான். சில வீடுகளில் இவனை வேலை வாங்கிக்கொண்டு பற்றாக்குறையாக பிக்ஷை போடுவார்கள். ஆனால் ஒரே ஒரு வீட்டில் மட்டும் ஒரு வேலையும் செய்யவிடாமல் அளவுக்கு மீறி பிக்ஷை போடுவார்கள். அப்படியானால் மற்ற வீடுகளைவிட அந்த ஒரு வீடே சிறந்ததல்லவா? அதுபோல் பல நியமங்களுடன் கூடிய பல தர்மங்கள் இருக்கின்றன. அவை நமக்குப் பரிபூர்ணமான பலனைத் தருவதில்லை. ஸ்வர்க்கம் முதலிய அல்ப பலன்களையும் தருகிறது. ஆனால் நாமகீர்த்தனமோ ஒரு நியமமுமில்லாமல் பரிபூரணமான பலனாகிய பரமபதத்தையே தந்து விடுகிறது.

27. வேதத்தில் சொல்லப்பட்ட ஸகல தர்மங்களையும் விட நாம கீர்த்தனமே சிறந்தது என்று ஆதிஶங்கரர் உபதேசித்திருக்கிறார். அப்படியிருக்க எவர்கள் நாமகீர்த்தனம் செய்யவில்லையோ அவர்கள் குரு துரோஹிகள்.

28. ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைசியர்கள், சூத்ரர்கள், சண்டாளர்கள், க்ருஹஸ்தர்கள், ஸன்யாஸிகள், வானப்ரஸ்தர்கள், ப்ரஹ்மசாரிகள், ஸ்த்ரீகள் யாவரும் கலியில் பகவந்நாம கீர்த்தனத்தாலேயே நற்கதி பெறவேண்டும். வேறு வழியில்லை.

29. வேத மந்த்ரங்களை ஆவ்ருத்தி செய்வதைவிட நாமகீர்த்தனமே சிறந்தது.

30. நாமகீர்த்தனத்திற்கு எந்த நியமமும் கிடையாது. எனவே, அது பலனில்லாமல் போவதற்கோ, விபரீதமான பலனைத்தரவோ வழியில்லை.

31. தேவதாந்தரங்களின் நாமங்களை ஆசாரமின்றி சொல்லலாகாது. ஆனால் விஷ்ணுவின் நாமங்களை எப்பொழுது வேண்டுமானாலும் சொல்லலாமென்பதால் நாமகீர்த்தனத்திற்கு தேச நியமமோ, கால நியமமோ, ஆசார நியமமோ தேவையில்லை.

32. போஜன காலத்தில் மௌனம் தேவையில்லை. நாம கீர்த்தனமே

அவசியம். ஏனெனில் நாமகீர்த்தனம் செய்யாமல் சாப்பிட்டால் மஹா பாபமுண்டு. ஒவ்வொரு கவளத்திற்கும் கோவிந்த நாமத்தைச் சொல்லிக்கொண்டு சாப்பிடுகிறவன் நித்யோபவாஸி.

33. ஸகல ஸதாசாரங்களையும் உல்லங்கனம் பண்ணினவனாயினும், ஸகல துராசாரங்களையும் செய்தவனாயினும் நாமகீர்த்தனம் செய்தால் அவனுக்கு மோக்ஷமுண்டு. நாமகீர்த்தனம் ஒருக்காலும் வீணாகாது.

34. ராஜ ரிஷியான விஶ்வாமித்ரர் மிகவும் கோரமான தவம் செய்து தான் ப்ரஹ்ம ரிஷியாக ஆனார். ஆனால் எல்லாவித தீயசெயலும் உடைய வேடனோ, ராம நாமத்தின் உச்சாரணத்தினால் மட்டும் வால்மீகி என்னும் ப்ரஹ்மரிஷியாகிவிட்டார். பகவந்நாமத்தின் மஹிமைக்கு இந்த ஒரு நிதர்சனம் போதாதா?

35. ப்ரஹ்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸன்யாஸி யாவராலும் நாமகீர்த்தனம் செய்யப்படவேண்டும். தாரணை, த்யானம் இவைகளைக் குறைத்துக்கொண்டு மாத்யான்ஹிகம் முதலியவை செய்யவேண்டுவது போலும், ஜோதிஷ்டோமத்திற்காக மற்ற நித்யகர்மங்களைக் குறைத்துக்கொண்டு அதிகநேரம் நாமகீர்த்தனமே அவசியம் செய்யவேண்டும்.

36. பகவானை அவமதிப்பவர்கள் நரகத்தை அடைவார்கள். அவனை பஜனம் பண்ணாமல் இருப்பதே அவனுக்குச் செய்யும் அவமதிப்பு.

37. ஸமுத்ரத்திற்கும் அதன் அலைகளுக்கும் பேதமில்லை. அதுபோல் ஸர்வ வ்யாபியான பரமாத்மாவிற்கும் அவன் மூர்த்திக்கும் பேதமில்லை. ஸமுத்ரத்திலுள்ள ரஸம் அலையிலும் வ்யாபித்திருப்பது போல், பரமாத்மாவின் ஸர்வஜ்ஞத்வம் அவரது மூர்த்தியிலும் வ்யாபித்திருக்கும்.

38. பகவானின் ஸ்வரூபம், வஸ்த்ரம், ஆபரணம், ஆயுதம் முதலிய யாவும் ஞான மயமானதே. ப்ராக்ருதமானதில்லை. பகவத் ஸ்வரூபத்தை பாஞ்ச பௌதிகமாக நினைப்பவன் நரகத்தை அடைவான்.

39. ப்ரஹ்லாதனால் உபதேசிக்கப்பட்ட நவலக்ஷணமான பக்தியில் பாதஸேவனம், ஸக்யம், ஆத்மநிவேதனம் என்னும் இந்த மூன்று பக்தியும் உத்தமாதிகாரிகளுக்கே கிடைக்கும். எனவே இந்த மூன்றும் செய்யாததினால் பாபமில்லை. ஆனால் ஶ்ரவணம், நாமகீர்த்தனம், அர்ச்சனம், வந்தனம், தாஸ்யம் என்னும் இந்த ஐந்து விதமான பஜனத்தில் யாவருக்கும் அதிகாரமுண்டு. இவைகளைச் செய்யாதவனுக்குப் பாபமுண்டு. அதிலும் நாமகீர்த்தனம் செய்யாதவனுக்கு அவசியம் பாபமுண்டு.

40. ஒரு புருஷன் ஸத்ரீவேஷம் அணிந்ததினால் மட்டும் அவனிடம் பெண்மை வந்துவிடாது. அது போல் ஞானஸ்வரூபியான

பகவான் அவதாரம் செய்து மாயையுடன் விளையாடுவதால் அவனுக்கு அஜ்ஞானம் வந்துவிடாது.

41. ஜகதீஶனை உபேக்ஷிப்பதால் பெரிய பெரிய அனர்த்தங்கள் விளையும். எனவே நாமகீர்த்தனம் அவசியம் செய்யப்பட வேண்டும்.

42. யோகிகள் மனம் லயிப்பதற்காக வேறு ஸாதனங்களை விட்டு நாமகீர்த்தனத்தை அங்கமாக வைத்துக்கொண்டு ஸ்வரூப த்யானத்தைச் செய்தால் விரைவில் மனோலயம் ஏற்படும்.

43. அனவரதமும் நாமகீர்த்தனத்தில் திடமான நிஷ்டை வராதவர்கள் நித்யகர்மானுஷ்டானத்திற்கு விரோதமின்றி நாமகீர்த்தனம் செய்யவேண்டும்.

44. மோக்ஷமார்கத்தில் ஸுப்ரஸித்தமான பகவத் பக்தியை விட்டு எவர்கள் மற்ற ஸாதனங்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு ப்ராணன் போகும் வரை க்லேசப்படுவது தவிர வேறெதுவும் ஸித்திக்காது.

45. நாமகீர்த்தனம் செய்து பகவானை பஜிக்காமல் கெட்ட புத்தி உடையவர்களாக எவர்கள் ''அஹம் ப்ரஹ்மாஸ்மி'' என்று சொல்லிக்கொண்டிருக்கின்றனரோ அவர்கள் நரகத்தை அடைவார்கள். ஏனெனில் பாபகர்மங்களுக்கு அவசியம் நரகமே ஏற்படவேண்டியது. பகவத்பக்தியில்லாதவனுக்கு ஞான ஶாஸ்த்ரத்தில் அதிகாரம் கிடையாது.

46. சுவையான போஜனம் கிடைத்துவிட்டால் அருசியான அன்னத்தில் மனம் செல்லாது. அதுபோல் பரம ஸுகமான பகவத்யானம் கிட்டிவிட்டால் விஷய ஸுகங்களிலுள்ள விருப்பம் போய்விடும்.

47. அத்வைத ஶாஸ்த்ரங்களைப் படித்ததனால் மட்டும் ஞானம் வந்து விடாது. ஏனெனில் மஹா பண்டிதர்கள்கூட பேருக்கும், புகழுக்கும், பணத்திற்கும், மனைவி மக்களுக்கும், வீடு வாசலுக்கும் ஆசைப்படுகின்றனர். எனவே நாமகீர்த்தனம் ஒன்றே ஞானத்தைத் தரும்.

48. நாமத்தை ஒரு தரம் உச்சரித்த அளவில் ஸகல பாபங்களும் அழிகின்றன. பல தடவை ஜபம் செய்வதால் பாபவாஸனைகள் ஒழிகின்றன. பாபவாஸனை ஒழிந்ததால் இடையறாத ஸத்ஸங்கமும் பாகவத கைங்கர்யமும் கிடைக்கும். ஸாதுக்களுக்கு கைங்கர்யம் செய்வதால் அவர்கள் உபதேசிக்கும் பகவத் ஸ்வரூபத்திலோ நாமத்திலோ இடையறாத த்யானம் உண்டாகும். இடையறாத த்யானத்தினால் ஸமாதிநிலை கிட்டும். ஸமாதி நிலையில் காமம் முதலியவை அடியோடு அழியும். அதனால் திவ்யஞானம் பிறக்கும். ஞானத்தினால் மோக்ஷம் ஸித்திக்கும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 23

- ஸ்ரீ ஸ்வாமிகள்

நம்முடைய வித்வத்தினாலோ, செல்வத்தினாலோ, குலத்தினாலோ, ஒருவர் கர்வம் கொள்ளக்கூடாது. அது மட்டும் இல்லாமல் அதற்காக மற்றவர்களை ஏளனமாக பேசக்கூடாது என்பதற்கு பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் அழகாக ஒரு கதை சொல்வார். அதை உங்களுக்கு சொல்லலாம் என்று இருக்கின்றேன்.

ஒரு ஸமயம் ஸர்வ ஶாஸ்த்ரங்களும் படித்த ஒரு பண்டிதர் கங்கையை கடப்பதற்கு ஒரு படகில் சென்றார். அவரும், படகு ஓட்டும் ஒரு சிறுவனும் மட்டும் படகில் இருந்தார்கள். அந்த படகோட்டும் சிறுவன் மிகவும் நல்லவனாக இருந்தான். அந்த பண்டிதரிடம் மிகவும் மரியாதை உடையவனாக இருந்தான். அந்த பண்டிதர், ''உனக்கு ராமாயணம் தெரியுமா?'' என்று அந்த சிறுவனைப் பார்த்து கேட்டார், அதற்கு அவன், ''தெரியாது'' என்றான். உடனே அந்த பண்டிதர், ''நீ மனிதனாக பிறந்ததே வீண்'' என்று பல விதமாக பழித்துரைத்தார். இப்படி ஒவ்வொரு க்ரந்தத்தின் பெயரையும் சொல்லி அதை அந்த படகோட்டி படித்திருக்கின்றானா என்று கேட்டு, அவன் படித்ததில்லை என்பதை கேட்டு பலவாறாக அவனை ஏளனபடுத்தினார். அவன் அந்த பண்டிதரால் பலவிதமாக அவமானபடுத்தப்பட்டும் மிகவும் ஶாந்தமாக இருந்தான்.

திடீர் என்று ஒரு பெரிய புயற்காற்று அடித்தது. படகு காற்றில் அங்கும் இங்குமாக அசைந்து ஒரேயடியாக நிலைகுலைந்து காணப்பட்டது. இதுவரை மிகவும் ஆணவமாகவும், ஏளனமாகவும் பேசி வந்த பண்டிதரின் முகத்தில் திடீரென்று பயம் ஏற்பட்டது. செய்வதறியாது தவித்தார். இதுவரை எதுவும் பேசாமல் மௌனமாக அவருடைய ஏளன பேச்சுக்களை எல்லாம் கேட்டு வந்த அந்த சிறுவன், இப்பொழுது அந்த பண்டிதரைப் பார்த்து ''ஸ்வாமி, காற்று வேகமாக அடிக்கின்றது. படகு கவிழ போகின்றது. தங்களுக்கு நீந்த தெரியுமா?'' என்று கேட்டான். அதற்கு அவர் தெரியாதே என்றார். அந்த படகோட்டி பையன், தாங்கள் ஸர்வ ஶாஸ்த்ரங்கள் படித்தும் ப்ரயோஜனமில்லை. இன்னும் சிறிது நேரத்தில் ஆற்று நீர் உங்களை அடித்துச் செல்ல போகின்றது. எனக்கு நீந்த தெரியும் ஆதலால் நான் கரை சேர்ந்து விடுவேன்'' என்று குதூஹலமாக கூறி கரையேறினான். பண்டிதரோ ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டார்.

ஆகவே எப்பொழுதும் யாரையும் ஏளனமாக பேசக்கூடாது. அதற்கான தண்டனையை இறைவன் உடனே தந்து விடுவார் என்பது இதிலிருந்து தெரிய வருகிறதல்லவா !



# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 26

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ **A.** ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி

## பரணீ

''பரணீயாள்வார் தரணியாள்வார்'' என்ற பொன்மொழியைக் கொண்ட உயர்வான நக்ஷத்ரம். தேசத்தையே ஆளக்கூடிய ஸாமர்த்தியம் கொண்டிருக்கும் நக்ஷத்ரம். தேவதை யமதர்மராஜா. பாசம், தண்டம் ஆகியவைகளை வைத்துக்கொண்டு மஹிஷ வாஹனத்தில் சற்று கறுத்த நிறத்துடன் கூடியவர் யமதர்மராஜர்.

இந்த பரணீ நக்ஷத்ரம் தை மாதம் 11-ந் தேதி முதல் 23-ந் தேதி முடிய நக்ஷத்ரோதயகாலத்தில் அடுப்பு கட்டி போல் 3 நக்ஷத்ரங்களால் ஆகாயத்தில் அடையாளம் காட்டுகிறார்கள். பரணீ நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் உண்மையையே பேசுவதில் விருப்பம் கொண்டவர்கள். இவர்களுக்கு தீர்க்க ரோகங்கள் கிடையாது. எப்போதும் ஸௌக்கியமாக இருப்பார்கள். தொடங்கிய கார்யங்களை முடிக்காமல் விடமாட்டார்கள். பிறருக்கு ஊழியம் செய்வதில் விருப்பம் கொண்டவர்கள். சிலருக்கு நகங்களில் சொத்தை இருக்கலாம். தலையில் ஏதாவது வடு இருக்கும் வாய்ப்பு உண்டு.

சற்று கர்வம் இவர்களுடன் கூடப்பிறந்தது. உடன் பிறந்தவர்களை இவர்கள்தான் முன் நடத்துவார்கள். மிகவும் சபல ஸ்வபாவம் இவர்களுக்கு உண்டு. பெரிய நீர் நிலைகலைக் கண்டு சற்று பயப்படுவார்கள். இவர்களிடம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். மிகவும் கண்டிப்பானவர்களாக இருப்பார்கள். பரணீ நக்ஷத்ரத்தில் பயணம் செய்யக்கூடாது. பரணீ நக்ஷத்ரகாரர்களுடன் பயணம் செய்தால் பயணம் சுகமாக அமையும். பெரிய ஸ்தானங்கள் இவர்களைத் தேடி வரும். முன்னோர்களை இவர்கள் பக்தி ஶ்ரத்தையுடன் உபாஸிக்க இவர்கள் மிகவும் முன்னேற்றங்களையும், மேன்மைகளையும் அடைவார்கள். கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், பரணீ நக்ஷத்ரகாரர்களின் சேர்க்கையால் நன்னடத்தை உள்ளவர்கள் ஆவார்கள்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 50

கௌதமர் போற்றும் ............................ (தொடர்ச்சி)

உலகில் மழை வர்ஷிக்கும்பொழுது எல்லா இடத்திலும் ஸமமாகவே வர்ஷிக்கின்றது. நீரே இல்லாத பூப்ரதேசத்திலும், நீர் நிறைந்துள்ள ஸமுத்திரத்திலும் மழை பாரபக்ஷமின்றி வர்ஷிக்கின்றது. அதுபோல் மழையானது சுத்தமான இடத்திலும் அசுத்தமான இடத்திலும் பெய்கின்றது. சந்திரனுடைய கிரணங்கள் மிகவும் குளிர்ச்சியானவை. ரஸிக்கத்தக்கவை. அதே சந்திரன் ஓடைகளிலும், நதிகளிலும், சோலைகளிலும், அழகான நந்தவனங்களிலும், அதே போல் காடுகளிலும், குப்பை கூளங்களிலும் துர்நாற்றம் உடையவனதாக இருந்தாலும்கூட எல்லாவற்றிலும் தன்னுடைய கிரணங்களை ஸமமாக வீசுகின்றது.

ஆதிஶங்கர பகவத்பாதாள் தேவியிடம் ப்ரார்த்தனை செய்யும்பொழுது, ''உன்னுடைய அருளை அடைவதற்கு எந்த விதத்திலும் தகுதி என்பது எனக்கு இல்லாதபோதிலும், உலகத்தில் உன்னை உபாஸித்து பஹுபுண்யங்களை சேர்த்துக்கொண்ட மஹாத்மாக்கள் இருப்பார்கள். அவர்களுக்கு அருள் செய்யும்பொழுது, எங்ஙனம் மழை பாரபக்ஷமின்றி வர்ஷிக்கின்றதோ, எங்ஙனம் சந்திரன் தன்னுடைய கிரணங்களை பாரபக்ஷமின்றி வீசுகின்றதோ, அங்ஙனம் என்னை கடாக்ஷிப்பாய்'' என்று கூறுகின்றார். ''அதிலும், முழுவதுமாககூட கடாக்ஷம் செய்யவேண்டாம். அதை தாங்குவதற்கான சக்தி என்னிடம் இல்லை. உன்னுடைய கடைக்கண்ணால் பார்த்தாலே போதும். நான் க்ருதார்த்தனாகிவிடுவேன்'' என்கிறார்.

அது போலவே, கௌதமர் போற்றும் கருணை மாமலையே என்ற பகவான் கடைகணித்தாள்வாய் அருணாசலா என்கிறார்.

''கடைக்கணித்தாள்வாய்,'' கடைக்கண்களால் பார்த்தாலே போதும் என்கிறார்.

■

இந்த ஸ்தலத்தில்தான் தேவிக்கு அர்த்தநாரீஸ்வர ஸ்வரூபமாக சிவனுடைய உடலில் பாதி இடம் கிடைத்தது. அருணாசலத்தில் இப்படி குகை நமசிவாயம், குரு நமசிவாயம், வ்ருபாக்ஷி முனிவர் என்ற பல மஹான்கள் வசித்து வருகின்றனர். அவர்களுடைய ஸமாதிகளையும் இன்று வரை பல பக்தர்கள் பூஜை செய்து வருகின்றனர். எல்லோரும் ஜீவன் முக்தர்கள். திருவண்ணாமலையிலேயே வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இந்த அருணாசலேஶ்வரர் பலவிதமான லீலைகளை புரிந்துள்ளார். இந்த க்ஷேத்ரத்தில் அவர்களுக்கு உன்னதமான பல அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன.

மஹாத்மாக்கள் தங்களுடைய ஸஞ்சாரத்தினாலும் ஸ்பர்ஸத்தினாலும், பார்வையினாலும், பேச்சுக்களினாலும், க்ரந்தங்களை வர்க்ஷித்தும் பலவிதத்திலும் லோகத்திற்கு க்ஷேமத்தையே செய்கின்றனர். வஸந்தருது, தான் எப்படி லோகத்திற்கு க்ஷேமம் செய்கின்றோம் என்று தெரியாமல் க்ஷேமம் செய்கின்றதோ, அதுபோல் மஹாத்மாக்கள் தங்கள் ஸங்கல்பம் இல்லாமலேயே லோகத்திற்கு ப்ரதிக்ஷணம் க்ஷேமத்தையே செய்து வருகின்றனர். அத்தகைய மஹாத்மாக்கள், அவதார புருஷர்கள் ஒரு க்ஷேத்ரத்தில் அவதாரம் செய்து, லோகம் முழுவதிலும் ஸஞ்சாரம் செய்தபோதிலும் இன்றும் அவர்கள் அவதரித்த ஸ்தலத்தில் விசேஷ ஸாந்நித்யம் இருப்பதால், பல பக்தர்கள் அங்கு சென்று வாஸம் செய்கின்றனர். வழிபாடு செய்கின்றனர். அத்தலத்தை நோக்கி புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.

ஒரு மஹாத்மா எப்பொழுதோ அவதரித்த ஸ்தலத்திற்கே இத்தகைய விசேஷம் இருக்குமானால் பல மஹாத்மாக்கள் வாழ்ந்து, இறைவனருள் பெற்று, அங்கேயே ஜீவஸமாதி அடைந்திருப்பார்களேயானால் இந்த க்ஷேத்ரத்தின் புனிதத்தன்மையை எடுத்துக் கூறத்தான் முடியுமா ! திருவண்ணாமலை க்ஷேத்ர மஹாத்மியத்தில், இந்த க்ஷேத்ரத்தில் எப்பொழுதும் ஐந்து ஜீவன் முக்தர்கள் வாழ்ந்து வருவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உலகத்தில் வெகுசில மஹான்களே ப்ரஸித்தமாகியிருக்கிறார்கள். பலர், வெளியுலகத்திற்குத் தெரியமாலேயே வாழ்கின்றனர். இங்ஙனம் இங்கே வெளியுலகத்திற்கு தெரியாமல் பலர் வாழ்ந்திருக்க கூடும். அத்தகைய திவ்யதேசம் இது. திருவண்ணாமலை க்ஷேத்ரத்தின் மஹாத்மியத்தை இவ்வளவுதான் என்று வரையறுத்துக் கூறவும் முடியுமோ? திருவண்ணாமலைக்கு நிகரான க்ஷேத்ரம் வேறு கிடையாது.

(தொடரும்)

# செய்திகள்

### செப்டம்பர் 2-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை

மதுரபுரி ஆஶ்ரமத்தில் மாதுரிஸகீ ஸமேத ப்ரேமிக வரதனின் ஆறாவது ப்ரஹ்மோத்ஸவம் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

கோகுலாஷ்டமி தினத்தன்று இரவு நந்தோத்ஸவம் கொண்டாட்டத்தில் ஆரம்பித்து ராதா கல்யாணத்தன்று தெப்போத்ஸவம் கண்டு விடையாற்றியன்று இனிதே முடிவடைந்தது. பல ஊர்களிலிருந்தும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

உத்ஸவத்தில் பெருமாள் தாயாருடன் மலைப்பட்டு, மாஹாண்யம் கிராமங்களுக்கு புறப்பாடு கண்டருளினார். கிராம மக்களின் உத்ஸாஹமான வரவேற்பு அவர்களின் பக்தியை வெளிக்காட்டியது.

கலியன் உத்ஸவம் - வேடுபறி நிகழ்ச்சியும் நடைபெற்றது.

### செப்டம்பர் 17-ந் தேதி முதல் 23-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் ராதாஷ்டமி அன்று துவங்கி ஏழு நாட்களுக்கு பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது. காலையில் ஸ்ரீமத்பாகவத பாராயணமும், மாலையில் ‘‘திவ்ய நாமஸங்கீர்த்தனமும்’’ நடைபெற்றன. ராதா ஸஹஸ்ரநாம லக்ஷார்ச்சனை நடைபெற்றது.

### செப்டம்பர் 21-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஶீயை முன்னிட்டு விசேஷ திவ்யநாம பஜனை நடைபெற்றது.

### செப்டம்பர் 22-ந் தேதி - ஶ்ரவணம்

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளின் அவதார தினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பெருமாளுக்கு ஸஹஸ்ரதாரையால் திருமஞ்சனம் செய்யப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள், காலை பத்தரை மணியளவில் ஶ்ரவண தீபம் ஏற்றினார்.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### அக்டோபர் 10-ந் தேதி முதல் 18-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் நவராத்ரி உத்ஸவம் கொண்டாடப்படும். தினமும் காலையில் நவாஹ பாராயணமும். திரிவேத பாராயணமும், மாலையில் ப்ரவசனமும் நடைபெறும்.

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று ''ஹரி நாம ஸங்கீர்த்தனம்'' செய்ய சித்தமாக உள்ளது.

''ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச்செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.


இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது ''நாம ஸங்கீர்த்தனம்'' என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்
''ப்ரேமிக பவனம்''
24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.



ஸுகயதிமே ஹ்ருதயம் ஸுகுமார:
ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுகரணம்



சண்டசாணூர முஷ்டிகாஸூர
- ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுகரணம்